## வகுப்பு - 7 - பருவம் - 3 - விலங்கியல்
## 19 - விலங்குகளின் இயக்கம்

**பயிற்சி வினாக்கள்:**

1. பொருத்துக:

(a) மண்புழு - (1) இறக்கைகள்

(b) கரப்பான்பூச்சி - (2) துடுப்புகள்

(c) பறவைகள் - (3) சீட்டா

(d) மீன் - (4) கால்கள்

1) a - 1 b - 2 c - 3 d - 4 2) a - 3 b - 4 c - 1 d - 2

3) a - 3 b - 4 c - 2 d - 1 4) a - 4 b - 2 c - 1 d - 3

2. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1) கட்டைவிரல் 2) இடுப்பு 3) தோள்பட்டை 4) மண்டையோடு

3. சரியான கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்

1) சினோவியல் மூட்டுகள் டை ஆர்த்தோசிஸ் மூட்டு என அழைக்கப்படுகிறது

2) தசைகள் எதிரெதிர் ஜோடிகளாக காணப்படும்

3) மூட்டுகளில் சினோவியல் திரவம் இல்லாததால் மூட்டு வீக்கம் ஏற்படுகிறது

4) எலும்புகளுக்கு இடையே காணப்படுவது நெகிழ்வான மூட்டாகும்

1) 1, 2 மற்றும் 3, 4 2) 1,3 மற்றும் 4

3) 1 மற்றும் 3 மட்டும் 4) 2,3 மற்றும் 4

4. தவறான இணை / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்

1) கீல் மூட்டு - ஒரு திசையில் மட்டுமே இயக்கம்

2) முண்டனையா மூட்டு - மூன்று திசைகளில் இயக்கம்

3) பந்துக்கிண்ண மூட்டு - இரண்டு திசைகளில் இயக்கம்

1) 1 மட்டும் 2) 3 மட்டும்

3) 1 மற்றும் 3 மட்டும் 4) 2 மற்றும் 3 மட்டும்

5. _______ குருத்தெலும்புகளுக்கு இடையிலான உராய்வைக் குறைக்கிறது.

1) தசை நாண் 2) தசைநார்

3) சினோவியல் திரவம் 4) மூட்டு காப்ஸ்யூல்

6. பொருத்துக:

a) கீல்மூட்டு - (1) இடுப்பு

LIVEWORKSHEETS

b) பந்து கிண்ண மூட்டு - (2) கணுக்கால்

c) முண்டனையா மூட்டு - (3) கட்டை விரல்

d) சேண மூட்டு - (4) மணிக்கட்டு

1) a - 2 b - 1 c - 4 d - 3 2) a - 4 b - 3 c - 2 d - 1

3) a - 3 b - 4 c - 1 d - 3 4) a - 1 b - 2 c - 3 d - 4

7. தவறான கூற்று / கூற்றுகளை கண்டறிக

1) மீன்கள் துடுப்புகளின் உதவியுடன் நீந்துகின்றன

2) கூர்மையான உடல் அமைப்பால் நீரின் ஓட்டத்துடன் சீராக செல்ல முடிகிறது

3) மீன்கள் நீந்தும் போது அதன் முன் பகுதியும் வால் பகுதியும் ஒரே திசையில் காணப்படும்.

4) காடல் என்னும் வால் துடுப்பு திசையை மாற்ற உதவுகிறது

1) 1 மற்றும் 2 2) 3 மட்டும் 3) 2 மட்டும் 4) 3 மற்றும் 4

8. கூற்று: கையில் காணப்படும் இருதலைத் தசை மற்றும் முத்தலைத் தசைகள் மூலம் இயக்கம் நடைபெறுகிறது

காரணம்: இவ்விரண்டு தசைகளும் ஒன்றுக்கொன்று இணையாக செயல்படுவதால் கைகளில் இயக்கம் நடைபெறுகிறது

1) கூற்று சரி காரணம் சரி 2) கூற்று சரி காரணம் தவறு

3) கூற்று தவறு காரணம் தவறு 4) கூற்று தவறு காரணம் சரி

9. தவறான இணையைக் கண்டறிக

| எலும்பு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) கழுத்து எலும்பு | - | 8 |
| 2) இடுப்பு எலும்பு | - | 5 |
| 3) மார்பெலும்பு | - | 12 |
| 4) வால் எலும்பு | - | 3 |

10. கீழ்க்காண்பவைகளில் எந்த மூட்டுகள் அசையாதவை?

1) தோள்பட்டை மற்றும் கை 2) முழங்கால் மற்றும் முழங்கை

3) மேல் தாடை மற்றும் மண்டை ஓடு 4) கீழ் தாடை

11. சரியான கூற்று / கூற்றுகளைக் கண்டறிக

1) கண்ணில் இரண்டு ஜோடி தசைகள் உள்ளன

2) அதிகமான வேலை செய்யும் தசைகள் கண்ணில் காணப்படுகின்றன

3) வட்டத் தசைகள் கண்ணில் பார்வையை பெரியதாக மாற்றுகின்றன

4) ரேடியல் தசைகள் கண்ணின் பாவையை சுருங்கச் செய்கின்றன

LIVEWORKSHEETS

1) 1 மற்றும் 2 சரி 2) 2 மற்றும் 3 சரி 3) 1 மற்றும் 4 சரி 4) 3 மற்றும் 4 சரி

12. பொருத்துக:

a) இதய தசை - (1) எலும்பு

b) வரித்தசை - (2) கழுத்து

c) வரியற்ற தசை - (3) இதயம்

d) தன்னிச்சையான தசை - (4) கருவிழி

(1) a - 3 b - 4 c - 1 d - 2 (2) a - 3 b - 4 c - 2 d - 1

(3) a - 2 b - 1 c - 4 d - 1 (4) a - 3 b - 1 c - 4 d - 2

13. கூற்றுக்கு பதில் அளிக்கவும்

1) மனிதன் மற்றும் ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் ஒரே எண்ணிக்கையிலான எலும்புகள் உள்ளன.

2) முள்ளெலும்புகள் வழுக்கு மூட்டுகளால் இணைக்கப்பட்டிருக்கும்.

3) முள்ளெலும்புகள் உடலை முன்னும், பின்னும், பக்கவாட்டிலும் வளைக்க உதவுகின்றன.

4) முள்ளெலும்பு தொடரில் 7 கழுத்து எலும்புகள் உள்ளன.

1) 1,2,3 மற்றும் 4 சரி 2) 1,3 மற்றும் 4 சரி 3) 2,3 மற்றும் 4 சரி 4) 1,2 மற்றும் 3 சரி

14. பொருத்துக:

a) மேற்கை எலும்பு - (1) ஹுமரஸ்

b) முழங்கை எலும்பு - (2) அல்னா

c) மணிக்கட்டு எலும்பு - (3) கார்பல்கள்

d) உள்ளங்கை எலும்பு - (4) மெட்டா கார்பல்கள்

1) a - 4 b - 3 c - 2 d - 1 2) a - 1 b - 2 c - 3 d - 4

3) a - 3 b - 4 c - 1 d - 2 4) a - 3 b - 2 c - 4 d - 1

15. மிக விரைவாக நீந்தும் பாலூட்டி இனம் ______.

1) வௌவால் 2) டால்பின் 3) நீர் யானை 4) நீர் நாய்

16. பொருத்துக:

a) கால் எலும்பு - (1) பீமர்

b) கணுக்கால் எலும்பு - (2) மெட்டா டார்சல்கள்

c) பாத எலும்பு - (3) டார்சல்கள்

d) தொடை எலும்பு - (4) பிபுலா

(1) a - 3 b - 2 c - 4 d - 1 (2) a - 3 b - 4 c - 2 d - 1

(3) a - 4 b - 3 c - 2 d - 1 (4) a - 4 b - 1 c - 2 d - 3

LIVEWORKSHEETS

17. பெல்விக் வளையம் என அழைக்கப்படுவது _______.

(1) மார்பெலும்பு (2) தோள்பட்டை எலும்பு

(3) இடுப்பு எலும்பு (4) மேற்கை எலும்பு

18. பெக்டோரல் வளையம் என அழைக்கப்படுவது _______.

(1) தோள்பட்டை எலும்பு (2) மார்பெலும்பு

(3) இடுப்பு எலும்பு (4) முன்கை எலும்பு

19. அமீபாய்டு இயக்கத்தில் செல்லில் உள்ள எது நகரும்போது போலிக்கால்களும் சேர்ந்து இயக்கத்தை ஏற்படுத்தும்?

(1) சைட்டோபிளாசம் (2) புரோட்டோபிளாசம்

(3) மைட்டோகாண்ட்ரியா (4) கோல்கை உறுப்பு

20. குதிரை சவாரி வடிவ மூட்டு எது?

(1) கீல் மூட்டு (2) பந்து கிண்ண மூட்டு

(3) சேன மூட்டு (4) வழுக்கு மூட்டு

21. எலும்பைச் சுற்றியுள்ள உறை யாது?

(1) பெரிகார்டியம் (2) புளூரா (3) பெரியாஸ்டியம் (4) ரெட்டினா

22. எலும்பு _______ ஆல் உருவாக்கப்பட்டுள்ளது.

(1) கால்சியம் மற்றும் பாஸ்பரஸ்

(2) இரும்பு மற்றும் அயோடின்

(3) இரும்பு மற்றும் குறைந்த அளவிலான மெக்னீசியம்

(4) மாங்கனீசு மற்றும் கார்பன்

23. கூற்று1: இயக்கமானது தன்னிச்சை உடையதாகவும் அல்லது தன்னிச்சை அற்றதாகவும் இருக்கலாம்

கூற்று 2: நடப்பது என்பது தன்னிச்சையான இயக்கமாகும் மற்றும் சுவாசம் என்பது தன்னிச்சையற்ற இயக்கமாகும்

(1) கூற்று இரண்டும் தவறு (2) கூற்று 1 சரி கூற்று 2 தவறு

(3) இரண்டும் சரி (4) கூற்று 1 தவறு 2 சரி

24. கீழ்க்கண்டவற்றுள் எது இடம்பெயரும் முறை?

(1) நடத்தல் (2) ஓடுதல் (3) நீந்துதல் (4) இவை அனைத்தும்

25. மீன்களில், நீந்தும்போது தமது திசையை மாற்ற உதவுவது எது ?

(1) செவுள்கள் (2) ஸ்டேபஸ் (3) காடல் (4) வலுவான தசைகள்

LIVEWORKSHEETS

26. தசை சுருக்கம் மற்றும் தளர்வுகளை மீண்டும் மீண்டும் நிகழ்த்தி இடம்பெயரும் உயிரினம் .

(1) பாம்பு (2) கரப்பான் பூச்சி (3) மண்புழு (4) வண்ணத்துப்பூச்சி

27. கரப்பான் பூச்சியின் உடல் முழுவதும் காணப்படும் பாதுகாப்பு பொருளின் பெயர் ______.

(1) கைட்டின் (2) புரோட்டின் (3) கொழுப்பு (4) தாது உப்பு

28. பறவைகளுக்கு எவை நகங்களாக மாறி உள்ளன?

(1) இறகுகள் (2) உரோமங்கள் (3) புரதம் (4) பின்னங்கால்கள்

29. சறுக்கு இயக்கம் மேற்கொள்ளும் உயிரினம் ______.

(1) பாம்பு (2) திமிங்கலம் (3) மீன் (4) டால்பின்

30. சிறுத்தை மணிக்கு எவ்வளவு வேகத்தில் ஓடும்?

(1) 76km (2) 76m (3) 760m (4) 76mm

31. ஆறு கால்களில் நடக்கும் விலங்குகளில் வேகமாக ஓடக்கூடியது ______.

(1) பட்டுப்பழு (2) கரப்பான் பூச்சி (3) மரவட்டை (4) கம்பளிப்பூச்சி

32. மிக விரைவாக நீந்தும் பாலூட்டி யாது?

(1) கடற்பசு (2) கடற்குதிரை (3) டால்பின் (4) திமிங்கலம்

33. அமீபாய்டு இயக்கம் எதன் மூலம் நடைபெறுகிறது?

(1) இறக்கைகள் (2) தசைகள் (3) போலி கால்கள் (4) எலும்பு

34. கீழ்க்கண்டவற்றுள் வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி

(1) முழங்கால் (2) முழங்கை (3) தோள்பட்டை (4) கணுக்கால்

35. கீழ்க்கண்டவற்றுள் எந்த எலும்பானது சேண மூட்டால் இணைக்கப்படவில்லை?

(1) கட்டை விரல் (2) தோள்பட்டை (3) இடுப்பு (4) உட்செவி

LIVEWORKSHEETS